**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.No.137/2023**

**DEPOSITION OF WITNESS FOR PW.4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | Dharaniparvatham | **Caste** | |
| **Father / Husband Name** | **Premkumar** | **Occupation** | **SSI OF POLICE, GUDIYATHAM TOWN P.S.** |
| **Village** | | **Religion** | **HINDU** |
| **Taluk** | **Gudiyatham** | **Age** | **45** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.01.2024**

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

## முதல் விசாரணை

1. நான் தற்போது குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்குமுன் இந்த காவல்நிலையத்தில் கடந்த 2016 ம் வருடம் பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர் திருமதி. கிரிஜா என்பவர் பணியாற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் அவரின் கையெழுத்துக்களை நான் காவல்நிலையத்தில் உள்ள கோப்புகளில் பார்த்துள்ளேன். மேலும் அவர் சார்பாகவும் இந்த வழக்கைப்பற்றி எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் நான் இந்த வழக்கிற்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 11.12.2016 ம் தேதி மாலை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அறிந்து உதவி ஆய்வாளர் திருமதி. கிரிஜா அவர்கள் குடியாத்தம் அரசு மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த சிதம்பரம் மகன் கார்த்திக்கிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி புகார் வாக்குமூலத்தின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 784/2016 பிரிவுகள் ,294(பி),341,324,506(2) இதசபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மேலும் அன்றைய தினமே மாலை 17.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாமு மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளார். மேலும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சிக்கையெழுத்து பெற்று மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிய ஜல்லிக்கல் 2 சா.பொ.1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்பு சாட்சிகள் கார்த்திக் சுப்பிரமணி, அலமேலு மற்றும் ஆறுமுகம் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்பு வழக்கின் எதிரியை தேடிவந்தநிலையில் 12.12.2016 காலை 06.00 மணிக்கு குடியாத்தம் லட்சுமி தியேட்டர் சந்திப்பிடம் இருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து பின் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

6. பின்பு பின்னர் அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் பாபு என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரி தரப்பு ஆட்சேபனை ஏதுமின்றி பிரிவு 294 குவிமுச வின் கீழ் அனுமதிக்கப்பட்டு அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. இத்துடன் இவ்வழக்கின் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது 294(பி),341,324,506(2) இதசபடி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் புலன்விசாரணை அதிகாரி நான் இல்லையென்றால் சரிதான். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை எதிரிகள் புரியவில்லையென்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyatham.